
# சந்திரயான்-3 விண்கலத்தின் சுற்றுப்பாதை மாற்றம்




**சென்னை:** சந்திரயான்-3 விண்கலத்தின் சுற்றுப்பாதை, 4-வது முறையாக வெற்றிகரமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நிலவில் தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக சந்திரயான்-3 விண்கலத்தை சுமார் ரூ.615 கோடியில் இந்திய விண்வெளி ஆய்வுநிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்தது. இந்த விண்கலம், எல்விஎம்-3 ராக்கெட் மூலம் □ஹரிகோட்டாவில் இருந்து கடந்த 14-ம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. குறைந்தபட்சம் 170 கி.மீ தொலைவும்,அதிகபட்சம் 36,500 கி.மீ தொலைவும்கொண்ட புவி நீள்வட்ட சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து பெங்களூரில் உள்ள இஸ்ரோவின் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து விண்கலத்தின் சுற்றுப் பாதையை நீட்டிக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி, சந்திரயான்-3 விண்கலத்தின் சுற்றுப்பாதை தூரம் 4-வது முறையாக வெற்றிகரமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து இஸ்ரோ வெளியிட்ட அறிவிப்பு:

EVA STALIN IAS ACADEMY

சந்திரயான்-3 விண்கலத்தின் சுற்றுவட்டப்பாதை இதுவரை 3 முறை மாற்றப்பட்டது. தொடர்ந்து 4-வது முறையாக நேற்று மதியம் 2 முதல் 3மணி அளவில் விண்கலத்தின் சுற்றுப்பாதை தூரமானது உயர்த்தப்பட்டது.

குறைந்தபட்சம் 233 கி.மீ. தொலைவும், அதிகபட்சம் 71,351 கி.மீ தொலைவும் கொண்ட சுற்றுப் பாதைக்கு விண்கலம் கொண்டு செல்லப்பட்டது. சர்வதேச நிலவு தினத்தில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிலவுக்கான பயணத்தில் சற்று முன்நோக்கி நகர்ந்துள்ளோம்.

அடுத்தகட்டமாக சந்திரயானின் பயணப்பாதை ஜூலை 25-ம் தேதி மாற்றி அமைக்கப்படும். அதன்பின் ஆகஸ்ட் 1-ல் புவி வட்டப் பாதையில் இருந்து விலகி விண்கலம் நிலவை நோக்கி பயணிக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**இன்று என்ன? - முதல் மகளிர் பள்ளி தொடங்கியவர்**



வேதநாயகம் பிள்ளை

தமிழின் முதல் புதினமான 'பிரதாப முதலியார் சரித்திரம்' நூலைப் படைத்தமைக்காக புகழ்பெற்றவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை. இவர் திருச்சி மாவட்டம் குளத்தூரில் 1826-ல் பிறந்தார். தமிழ், ஆங்கில மொழிகளுடன் கூடிய கல்வியை தியாகராச பிள்ளையிடம் பயின்றார்.

நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளர், பதிவாளராகப் பணியாற்றினார். மாயவரம் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். வீணை வாசிப்பதில் வல்லவர். 1805 முதல் 1861 வரையிலான நீதிமன்றத் தீர்ப்புகளை ஆங்கிலத்தில் இருந்து மொழிபெயர்த்து சித்தாந்த சங்கிரகம் என்ற நூலாக வெளியிட்டார். சட்ட விதிகளைத் தொகுத்து ஆங்கிலத்தில் முதலில் வெளியிட்டார்.

இவரது கட்டுரைகள், பெண் கல்வி, தாய்மொழிப் பற்று, கடவுள் பக்தி, நல்லாட்சி, நீதி நெறிகள் என பல அம்சங்களையும் உள்ளடக்கியவை. தமிழகத்தின் முதல் பெண்கள் பள்ளியைத் மாயவரத்தில் தொடங்கினார்.

தமிழகத்தில் பஞ்சம் ஏற்பட்டபோது, தன் சொத்துளை தானமாக வழங்கினார். குழந்தை திருமணம், உடன்கட்டை ஏறும் வழக்கத்தை கடுமையாக எதிர்த்தார். 'மறுமலர்ச்சிக் கவிஞர்' என போற்றப்படும் வேதநாயகம் பிள்ளை 1889 ஜூலை 21-ம் தேதி காலமானார்.

## ஜெய்ப்பூரில் அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கம்: ரிக்டரில் 4.4 ஆக பதிவு; மக்கள் பீதி

**ஜெய்ப்பூர்:** ராஜஸ்தான் மாநிலத் தலைநகர் ஜெய்ப்பூரில் இன்று அதிகாலை அடுத்தடுத்த ஏற்பட்ட நிலநடுக்கங்களால் மக்கள் பீதியடைந்து வீதிகளில் தஞ்சம் புகுந்தனர். இந்த நிலநடுக்கம் ரிக்டரில் 4.4 ஆக பதிவானது.

இது தொடர்பாக தேசிய நிலநடுக்க ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில், ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் இன்று அதிகாலை 4.09 மணியளவில் 4.4 ரிக்டராக பதிவானது. இது நிலத்துக்கு அடியில் 10 கிலோமீட்டர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது என்று தெரிவித்துள்ளது.

**அடுத்தடுத்து 4 முறை:** முதலில் அதிகாலை 4.09 மணியளவில் 4.4 ரிக்டர் அளவில் ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன் பின்னர் 4.22 மணியளவில் 3.1 ரிக்டர், 4.25 மணியளவில் 3.4 ரிக்டர் என மூன்று முறை நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

அரைமணி நேரத்தில் 3 நிலநடுக்கங்கள் ஏற்பட்டதால் மக்கள் பீதியடைந்தனர். அதிகாலையில் வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்த மக்கள் வீதிகளில் தஞ்சமடைந்தனர். வாட்ஸ் அப், ட்விட்டர் என சமூக வலைதளங்கள் மூலம்

நிலநடுக்கம் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து உற்றார், உறவினர்களின் நலன் விசாரித்தனர். இந்த நிலநடுக்கத்தில் உயிரிழப்போ, பொருட்சேதமோ ஏற்பட்டதாக இதுவரை தகவலில்லை.

முன்னாள் முதல்வர் வசுந்தரா ராஜே தனது ட்விட்டர் பக்கத்தில், ஜெய்ப்பூரில் நிலநடுக்கத்தை உணர்ந்தேன். மக்கள் அனைவரும் நலமா? என்று பதிவிட்டிருந்தார்.

## மணிப்பூர் கொடூர சம்பவம் தொடர்பாக முக்கிய குற்றவாளிகள் கைது: தேசிய மகளிர் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை



மணிப்பூர் மாநிலத்தில் பழங்குடியின பெண்கள் இருவருக்கு கடந்த மே 4-ம் தேதி நடந்த கொடூர சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, சூரசந்த்பூர் மாவட்டத்தில் பழங்குடியின அமைப்பைச் சேர்ந்தவர்கள் நேற்று போராட்டம் நடத்தினர்.

**புதுடெல்லி:** மணிப்பூரில் பழங்குடியின பெண்களுக்கு நேர்ந்த கொடூர சம்பவம் குறித்து தேசிய மகளிர் ஆணையம் நேற்று தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்தது. அந்த வீடியோ காட்சிகளை நீக்கும்படி ட்விட்டர் இந்தியாவுக்கு தேசிய மகளிர் ஆணையம் உத்தரவிட்டது.

மணிப்பூரில் மைத்தேயி இனமக்கள் 53 சதவீதம் பேர் உள்ளனர். இவர்கள் இம்பால் பள்ளத்தாக்கு பகுதியில் வசிக்கின்றனர். குகி மற்றும் நாகா பழங்குடியினத்தவர்கள் 40 சதவீதம் பேர் உள்ளனர். இவர்கள் மலைப் பகுதிகளில் வசிக்கின்றனர். இந்நிலையில், மைத்தேயி மக்களும் தங்களுக்கு பழங்குடியினர் அந்தஸ்து வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பழங்குடியினத்தவர்கள் கடந்த மே 3-ம் தேதி ஒற்றுமை பேரணிநடத்தினர்.

இதில் பழங்குடியினத்தவர்களுக்கும், மைத்தேயி இனத்தவர்களுக்கும் வன்முறை வெடித்து மாநிலம் முழுவதும் பரவியது. பல கட்டிடங்களுக்கு தீ வைக்கப்பட்டது. கலவரத்தை கட்டுப்படுத்த ராணுவத்தினரும், துணை ராணுவப் படையினரும் குவிக்கப்பட்டனர். மணிப்பூரில் 2 மாதங்களுக்கு மேலாக தொடர்ந்த வன்முறை சம்பங்களில் 150-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர், பலர் காயம் அடைந்தனர்.

இந்நிலையில் கடந்த மே 4-ம் தேதி, மணிப்பூரின் சேனாபதி மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் பழங்குடியினத்தை சேர்ந்த சிலரை மைத்தேயி இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கடத்திச் சென்றனர்.

அவர்களில் இரு பெண்களை ஆடையின்றி, மானபங்கம் செய்தபடி கிராமத்துக்குள் ஊர்வலமாக இளைஞர்கள் அழைத்துச் சென்றனர். அதில் ஒரு பெண்ணை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்தனர். தங்களை விட்டு விடும்படி அந்த இளைஞர்களிடம் பழங்குடியின பெண்கள் கெஞ்சினர். இச்சம்பவத்தை தடுக்க முயன்ற ஒரு பழங்குடியின இளைஞரையும் அவர்கள் கொலைசெய்தனர். அந்த வீடியோ காட்சிகள் நேற்று முன்தினம் சமூக ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், இச்சம்பவம் குறித்து தேசிய மகளிர் ஆணையதலைவர் ரேகா சர்மா நேற்று அளித்த பேட்டியில் கூறியதாவது:

மணிப்பூரில் நடந்த சம்பவத்தை தேசிய மகளிர் ஆணையம் கண்டிக்கிறது. இது தொடர்பாக தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்துள்ளோம். இந்த விஷயத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி மணிப்பூர் டிஜிபியிடம் கூறினோம். இச்சம்பவத்தில் ஈடுபட்டுள்ள முக்கிய குற்றவாளியை கைது செய்துள்ளதாகவும், மற்றவர்களும் விரைவில் கைது செய்யப்படுவர் எனவும் அவர் உறுதியளித்துள்ளார். மணிப்பூர் வீடியோ காட்சியை ட்விட்டரில் இருந்து நீக்க ட்விட்டர் இந்தியா நிறுவனத்துக்கு உத்தரவிட்டுள்ளோம். இவ்வாறு ரேகா சர்மா கூறினார்.

மணிப்பூர் வீடியோ சம்பவம் வெளியான பின்பு, மணிப்பூரின் தவுபல் மாவட்டத்தில் உள்ள நாங்போக் செக்மாய் காவல் நிலையத்தில், அடையாளம் கண்டறியப்படாத ஆயுத கும்பல் மீது கடத்தல், கூட்டு பாலியல் வன்கொடுமை, மற்றும் கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வீடியோ பதிவில் தெரியும் முக்கிய குற்றவாளிகள் இருவரை போலீசார் நேற்று கைது செய்தனர். மற்றவர்களையும் பிடிக்க தீவிர தேடுதல் வேட்டையில் சிறப்புப் படை போலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

மணிப்பூர் வீடியோ சம்பவம் குறித்து மாநில முதல்வர் பிரேன் சிங்குடன் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்மிருதி இராணி பேசினார். இச்ம்பவம் தொடர்பான விசாரணை தீவிரமாக நடைபெறுவதாகவும், இதில் ஈடுபட்டவர்கள் யாரும் தப்ப முடியாது எனவும் அமைச்சர் ஸ்மிருதி இராணியிடம் முதல்வர் பிரேன் சிங் தெரிவித்தார்.

**அமித் ஷா உத்தரவு:** மணிப்பூர் முதல்வர் பிரேன் சிங்குடன் நேற்று பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மணிப்பூர் வீடியோ சம்பவத்தில் ஈடுபட்ட அனைவரையும் பிடித்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**மிக சிறிது, மிக தாமதம்:** மணிப்பூர் சம்பவம் பற்றி பிரதமர் மோடி கூறியது பற்றி காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கூறியதாவது:

புரிந்துகொள்ள முடியாத, மன்னிக்க முடியாத 1800 மணி நேரத்துக்கும் மேலான அமைதிக்குப் பின்பு, மணிப்பூர் சம்பவம் குறித்து பிரதமர் மோடி மொத்தம் 30 வினாடிகள் பேசியுள்ளார். அரசின் தோல்விகளை மறைக்கவும், மணிப்பூர் மனிதத் தன்மையற்ற சோக சம்பவத்தில் இருந்து கவனத்தை திசை திருப்பவும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் பெண்களுக்கு எதிராக நடக்கும் குற்றங்கள் பற்றி பேசுகிறார். மணிப்பூரில் நடைபெறும் இனக் கலவர விவகாரத்திலிருந்து பிரதமர் மோடி முற்றிலும் விலகிச் செல்கிறார்.

மணிப்பூரில் சட்டம், ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துள்ளது. இப்போது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை மிகவும் சிறியது மிகவும்தாமதமானது. வெறும் வார்த்தைகளால் எதுவும் நடக்காது. செயல்கள் மூலம் பேசவேண்டும். இச்சம்பவத்துக்கான பொறுப்பிலிருந்து பிரதமரும், உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் தப்ப முடியாது. மணிப்பூர் முதல்வர் உடனடியாக பதவி விலக வேண்டும். இவ்வாறு ஜெய்ராம் ரமேஷ் கூறினார்.

**ப.சிதம்பரம் கண்டனம்:** முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் ட்விட்டரில் விடுத்துள்ள செய்தியில், ‘‘முதலாவதாக மணிப்பூரில் பிரேன் சிங் ஆட்சியைபிரதமர் மோடி கலைத்துவிட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்த வேண்டும். மணிப்பூர் விஷயத்தில் பிரதமர் இப்போதுதான் தனது அமைதியை கலைத்துள்ளார். அமெரிக்கா, பிரான்ஸ், ஐக்கிய அரபு நாடுகளுக்கு பயணம் செய்யும்போதெல்லாம் அவர் மணிப்பூர் மக்கள் பற்றி நினைக்கவில்லை. பெண்களுக்கு எதிராக நடந்த கொடூர சம்பவத்தால் மணிப்பூர் பற்றி அவருக்கு ஞாபகம் வந்ததா? அல்லது உச்ச நீதிமன்ற எச்சரிக்கை காரணமா?’’ என குறிப்பிட்டுள்ளார்.

**மரண தண்டனை:** மணிப்பூர் சம்பவம் குறித்து முதல்வர் பிரேன் சிங் அளித்துள்ள பேட்டியில், ‘‘மனிதத் தன்மையற்ற செயலுக்கு உள்ளான இரண்டு பெண்களையும் நினைத்து வேதனைப்படுகிறேன். வீடியோ வெளியானவுடனே போலீஸார் தாமாக முன்வந்து வழக்கு பதிவு செய்து, முதல் நபரை கைது செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணை நடைபெறுகிறது. இச்சம்பவத்தில் ஈடுபட்ட அனைவர் மீதும் கடும் நடவடிக்கை உறுதி செய்யப்படும். அவர்களுக்கு மரண தண்டனை கிடைக்கவும் வாய்ப்புள்ளது. இதுபோன்ற கொடூர செயல்களுக்கு நமது சமூகத்தில் இடமில்லை’’ என்றார்.

**ஊழல் தடுப்புச் சட்டம் தொடர்பாக பொதுநல வழக்கு**



**புதுடெல்லி**: ஊழல் தடுப்புச் சட்டத்தில் மத்திய அரசு 2018-ல் திருத்தம் மேற்கொண்டது. அதன்படி, ஊழல் புகார் தொடர்பாக அரசு அதிகாரிகளை விசாரிக்க முன் அனுமதி பெற வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டது.

இதனால் ஊழல் வழக்கில் விசாரணை நீர்த்துப்போகும். என்று கூறி, 2018-ம் ஆண்டு பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டது. அம்மனு தொடர்பாக 4 தினங்களுக்குள் பதிலளிக்குமாறு 2019 பிப்ரவரி மாதம் மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியது. ஆனால், அதன் பிறகு அந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில், அம்மனுவை விசாரணைக்கு எடுக்கும்படி மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் கோரிக்கை வைத்தார். இதையடுத்து இம்மனுவை உடனடியாக விசாரணைக்கு எடுக்க உச்ச நீதிமன்றம் ஒப்புதல் தெரிவித்துள்ளது.

## மணிப்பூர் கொடூரம் | “அரசு தவறினால், நாங்களே நடவடிக்கை எடுப்போம்” - உச்ச நீதிமன்றம் கொந்தளிப்பு

EVA STALIN IAS ACADEMY


உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் | கோப்புப்படம்

**புதுடெல்லி:** மணிப்பூரில் பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட கொடூர வன்முறைச் சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள உச்ச நீதிமன்றம், “அரசு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால், நாங்களே நடவடிக்கை எடுப்போம்” என்று கொந்தளிப்புடன் தெரிவித்துள்ளது.

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு, மணிப்பூர் வீடியோ தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்கும்படி மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தியதுடன், இந்தச் சம்பவம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து உச்ச நீதிமன்றத்துக்கு தெரிவிக்க வேண்டும் என்று கூறியுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து கண்டனம் தெரிவித்துள்ள தலைமை நீதிபதி, "நேற்று பகிரப்பட்ட வீடியோவால் நாங்கள் மிகவும் தொந்தரவுக்குள்ளாகி உள்ளோம். இந்தச் சம்பவம் மிகவும் கவலையளிக்கும் ஒன்று. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய நேரம்; நடவடிக்கை எடுங்கள்.

விரோதத்தை தீர்த்துக்கொள்ள பெண்களை வன்முறையின் கருவியாக பயன்படுத்தப்படுவது அரசியலமைப்பு ஜனநாயகத்தால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாத மனித உரிமை மீறல். அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், நாங்கள் எடுப்போம். இதுபோன்ற வன்முறையில் ஈடுபடுபவர்கள் மீது வழக்குப் பதிந்து அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்துவது அவசியம் என்று நாங்கள் கருதுகிறோம்" என்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தெரிவித்தார்.

இந்த வன்முறைச் சம்பவம் குறித்து மத்திய அரசு மற்றும் என்.பிரேன் சிங் தலைமையிலான மாநில அரசிடமிருந்தும் அறிக்கை கேட்டுள்ள உச்ச நீதிமன்றம், வழக்கை ஜூலை 28-ம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக தெரிவித்துள்ளது.



EVA STALIN IAS ACADEMY

**பிரேனை அழைத்த அமித் ஷா:** இதனிடையே, மணிப்பூர் மாநில முதல்வர் பிரேன் சிங்கை வியாழக்கிழமை தொலைப்பேசியில் அழைத்துப் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, இந்தச் சம்வத்தில் தொடர்புடைய அனைவரின் மீதும் சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளாதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**மவுனம் கலைத்த பிரதமர் மோடி:** மணிப்பூரில் இரண்டு மாதங்களுக்கு மேலாக கலவரம் நடந்து வரும் நிலையில், நேற்று வெளியான கொடூர சம்பவத்தின் வீடியோவுக்குப் பின்னர் முதல் முறையாகபிரதமர் மோடி பேசுகையில், “எனது இதயம் வலியால் நிரம்பியுள்ளது. இந்தச் சம்பவம் எந்த ஒரு நாகரிக சமூகத்துக்கான அவமானம். மணிப்பூரின் மகள்களுக்கு நடந்தது மன்னிக்க முடியாதது” என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

**தண்டனை உறுதி:** “குற்றவாளிகளுக்கு எதிராக மரண தண்டனை கிடைக்கும் வகையில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி கூறுகிறேன். இதுபோன்ற கொடூரமான செயல்களுக்கு நமது சமூகத்தில் இடம் இல்லை என்பதை புரிந்து கொள்ளவேண்டும்" என்று மாநில முதல்வர் பிரேன் சிங் தெரிவித்துள்ளார்.

மணிப்பூர் மாநிலத்தில் குகி பழங்குடியினத்தை சேர்ந்த இரண்டு பெண்களை மைதேயி சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள் கும்பல் ஒன்று சேர்ந்து நிர்வாணப்படுத்தி வீதியில் ஊர்வலமாக அழைத்து சென்ற கொடூரமான வீடியோ சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு தேசிய அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அந்த இரண்டு பெண்களில் ஒருவர் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கும் ஆளாகியுள்ளார். இது தொடர்பாக பல்வேறு தரப்பினர் தங்கள் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

EVA STALIN IAS ACADEMY